# THIRUMARAI AASAAN


**S. Rajanayagam**

**Editor**

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol. 29 April 2016 Issue - 4


ஆசிரியர் உரை

# இயேசு உயிர்த்தெழுந்த நிகழ்விலிருந்து...

**நாம்** நம்முடைய பேச்சு வழக்கில் ஏதாவது ஒன்றின் மிகத் தேர்ந்த தன்மையை ஏனையோருக்கு எடுத்துரைப்பதற்கோ அல்லது ஒருவரின் தன்னிகரில்லாச் சிறப்பை உலகிற்கு அறிவிப்பதற்கோ, " இச்செயல் தான் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருக்கிறதென்றோ " அல்லது " இவர் தான் எல்லாவற்றுக்கும் எல்லாமுமாக இருக்கிறார் " என்றோ குறிப்பிடுவதுண்டு. இப்படி நாம் ஒன்றைப்பற்றிப் பேசுவதும், ஒருவரைப் பற்றிக் குறிப்பிடுவதும் எல்லோருடைய வாழ்க்கையிலும் அவ்வப்போது நடக்கத் தான் செய்கிறது. பொதுவான இக்கருத்துக்கு, பரிசுத்த வேதாகமமும் தனது வெளிப்பாடுகள் மூலம் வலுசேர்க்கவே செய்கிறது. எப்படியெனில், பவுலடியார் கொரிந்து பட்டணத்து சபையாருக்கு எழுதின நிருபத்தின் வரிகளில், " கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால் எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா " என்று ( I கொரி.15 : 14) கூறியுள்ளார்.

அதாவது, கிறிஸ்துவானவர் மரணத்தை வென்று மூன்றாம் நாளில் உயிரோடெழுந்த நிகழ்வு தேவனால் நடப்பிக்கப்படவில்லையென்றால், கிறிஸ்துவும், கிறிஸ்து சம்பந்தப்பட்ட அனைத்தும் வீண் என்று வெளிப்படுத்தியுள்ளார். இதையே வேறுவிதமாகச் சொல்வதென்றால்,

“ கிறிஸ்தவத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தான் எல்லாவற்றுக்கும் எல்லாமுமாக இருக்கிறது ” என்று பொருள்படும்.

இப்படிப்பட்ட இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மானிட வரலாறும் உலகச் சரித்திரமும் கண்டிராத ஒரு புதுமை. கிறிஸ்தவ மார்க்கத்துக்கான இச்சிறப்பு உலகில் காணப்படும் எந்த ஒரு மதத்திற்கும் இல்லவே இல்லை. எருசலேம் மாநகரில் இந்நாள் வரைக்கும் **திறந்து கிடக்கும் கல்லறையே** இதற்குச் சான்று. ஏனைய மதங்களுக்கான பக்தி நெறிமுறைகள், வாழ்ந்து மரித்துப்போன அந்தந்த மதத்தைத் தோற்றுவித்தவர்களின் போதனைகளை மட்டும் ஆதாரமாகக் கொண்டுள்ளது. அந்நம்பிக்கைகளுக்கு சரித்திர ரீதியிலான உண்மைகளோ, நம்பகத் தன்மைக்கான சாட்சியங்களோ எதுவும் இல்லை அல்லது இருக்க வேண்டிய அளவுக்கு இல்லை. ஆயினும், அப்படிப்பட்ட நம்பிக்கைகள் உலகின் பல பகுதிகளில் வாழும் கணிசமான மக்களால் ஏற்றுப் பின்பற்றப்படுகிறதென்பது வேறு விஷயம். ஆனால், கிறிஸ்தவம் இவைகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாக, உலகம் தோன்றியது முதல், சரித்திர செயல்பாடுகளையும், வரலாற்று உண்மைகளையும், பூகோள ரீதியிலான ஆதாரங்களையும், விஞ்ஞான ரீதியான சாட்சியங்களையும் நிரூபணங்களாகத் தன்னகத்தே குவித்துள்ளது. இவைகளுக்கெல்லாம் மகுடமாக இருப்பதுதான் “ கிறிஸ்துவின் உயிர்த் தெழுதல் ”.

“ உயிர்த்தெழுதல் ” என்னும் வார்த்தைக்குச் சொல்லர்த்த ரீதியிலான பொருள் ” மாண்ட உயிர்களின் மீட்டெழுச்சி ” என்பது. இப்பொதுவான பொருளினடிப்படையில், வேதாகமத்தின் பழைய, புதிய ஏற்பாடுகளில் மரித்துத் திரும்பவும் உயிர்பெற்றவர்கள் இருக்கவே செய்கிறார்கள். அவர்களெல்லாம் தேவன் தம்முடைய தாசர்களுக்குக் கொடுத்த வல்லமையினாலே உயிரோடு எழுப்பப்பட்டவர்கள். ஆனால், அவர்களெல்லாரும் மீண்டும் மரித்தார்கள். இந்தச் சரீர மீட்டெழுச்சிகளோடு இயேசுவின் உயித்தெழுதலை நாம் ஒப்பிட முடியாது. எப்படியெனில், இயேசுவானவர் வேத வாக்கியங்களின்படி மரித்து, தேவனுடைய வல்லமையின்படி **உயிரோடு எழுப்பப்பட்டு இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.** ஆம், இயேசு தேவனு டைய வலது பாரிசத்தில்இப்பொழுது வீற்றிருக்கிறார் (மாற்கு 16 : 19 ; எபி. 1 : 3).

இப்படித்தேவத்திட்டத்தோடும், தேவச் செயலோடும் நடந்தேறிய இயேசுவின் உயிர்த்தெழுதல், சரித்திரத்தின் ஒரு மகத்தான நாளில் எருசலேம் பட்டணத்தில் நடந்தேறியது. வாரத்தின் முதல் நாளாகிய அந்நாளில் நடந்த சம்பவத்தை நான்கு நற்செய்தியாளர்களும் தவறாமல் குறிப்பிட்டுள்ளனர். இயேசுவின் உயிர்த்தெழுதலை ஆவியானவர் இவ்விதம்

வெளிப்படுத்தியிருப்பது அதன் முக்கியத்துவத்தை நமக்கு மேலும் உணர்த்துகிறதாக உள்ளது.

எனவே, இயேசு உயிர்த்தெழுந்த சம்பவத்திலிருந்து நமக்கான சில பாடங்களைக் கற்றுக்கொள்ள இம்மாதம் முயற்சிக்கப் போகிறோம். நம்முடைய இம் முயற்சிக்கு ஆதாரமாக மாற்கு 16 – ம் அதிகாரத்தை நான் எடுத்துக் கொள்ளுகிறேன்.

அந்த நாள் சரித்திரத்தின் பக்கங்களில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வாரத்தின் முதல் நாள். இயேசுவானவர் இப்பூமியில் ஊழியம் செய்த நாட்களில் அவர் மீது பாசமும், நேசமும் கொண்டு, அவர் பிடிக்கப்பட்ட நிலையிலும் ஏனைய சீடர்களைப் போல் ஓடிப்போகாமல், சிலுவை வரை அவரைப் பின்பற்றின ஸ்திரீகளில் குறிப்பிடத்தக்கவர்களான மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சாலோமே என்பவர்களும் செத்துப்போன அவருடைய சரீரத்திற்குச் சுகர்தவர்க்கமிடும்படி, ஏற்கனவே வாங்கி வைத்திருந்த பொருள்களோடு அந்தப் பொன்னாளின் அதிகாலை வேளையிலே கல்லறையினிடத்தில் வந்து, **கல்லறையின் வாசலிலிருக்கிற கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான்** என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். (மாற்கு 16 : 1 – 3)

சரீரத்தில் பெலவீனப் பாண்டங்களாகப் படைக்கப்பட்ட இப்பெண்கள் இவ்விதம் பேசிக் கொண்டதற்கான காரணம் அடுத்த வசனத்தில் உள்ளது. ஆம், " அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தது " என்று காண்கிறோம் ( வசனம் 4 ). ஆயினும், அவர்கள் கல்லறையை ஏறிட்டுப் பார்த்தபோது, அவர்களை மலைப்புக் குள்ளாக்கின அந்தக் கல் தள்ளப்பட்டிருந்தது. அங்கே அவர்கள் அச்சத்துடனே உள்ளே பிரவேசித்து, வெள்ளையங்கி தரித்தவனாய் உட்கார்ந்திருந்த வாலிபனைக் கண்டு பயந்தார்கள் (வசனம் 5). இங்கே பாருங்கள், கல்லறையினிடத்தில் வருவதற்கு முன் **மலைப்பு**, கல் லறையின் கிட்டே வந்தபோது **வியப்பு**, உள்ளே பிரவேசத்தபோதோ **திகைப்பு.** அப்பொழுது அவர்களுக்கு, " சிலுவையிலறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிர்த்தெழுந்தார். அவர் இங்கேயில் லை ; இதோ, அவரை வைத்த இடம் " என்று உரைக்கப்பட்டது (வசனம் 6).

இயேசு உயிர்த்தெழுந்த நாளில் முதல் தரிசனம் பெற்றவள் மகதலேனா மரியாள். அவளிடத்திலிருந்து தான் இயேசு ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். இந்த மரியாள்தான் துக்கப்பட்டு, அழுது கொண்டிருந்த

இயேசுவின் சீடர்களுக்கு **இயேசு உயிர்த்தெழுந்தார்** என்னும் ஆறுதலின் செய்தியை முதலில் கொடுத்தாள். (வசனம் 10 ). அதன் பின்பு ஒரு கிராமத்துக்கு நடந்து சென்று கொண்டிருந்த இரண்டு பேருக்கு மறுரூபமாக இயேசு தரிசனமானார் ( வசனம் 12 ). அதன் பின்புதான் பதினொருவரும் போஜன பந்தியிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி, உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற் போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும், இருதயக் கடினத்தைக் குறித்தும் கடிந்து கொண்டார் (வசனம் 14).

சரி, பரிசுத்த ஆவியானவர் மாற்கு நற்செய்தியாளனைக் கொண்டு இப்படியாக வெளிப்படுத்தியிருப்பவைகளை ஆதாரமாகக் கொண்டு நமக்கான பாடங்களை இப்பொழுது கற்றுக் கொள்வோம்.

## I. இல்லாதவைகளை இருக்கிறதாக எண்ணி வாழ்ந்து கொண்டிருப்பது

இயேசுவானவர் உயிர்த்தெழுந்த சம்பவத்திலிருந்து, மாற்கு நற்செய்தியாளன் மூலம் நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், தேவன் நமக்காகத் தீர்த்துவிட்ட பிரச்சனைகளை இன்னும் இருக்கிறதாக எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது.

எப்பொழுது விடியுமென்று இயேசுவின் மீது மெய்பக்தி கொண்ட அந்த ஸ்திரீகள் காத்திருந்து, சூரியன் உதயமாகிறபோது கல்லறையினிடத்திற்கு வந்து. " கல்லை நமக்காக எவன் புரட்டித் தள்ளுவான் " என்று பேசிக் கொண்டார்கள். ஆனால், ஏறிட்டுப் பார்க்கிறபோது ஐயோ என்ன செய்வது? ஐயோ எப்படி முடியும்? என்று இவர்கள் எண்ணின அந்தக் கல் தள்ளப்பட்டிருந்தது. தேவன் இந்த பக்திப் பெண்களுக்காக முன்பாகப் போய், இவர்களுக்காக இங்கே கிரியை நடப்பித்திருக்கிறார். இவர்களுக்கு எது தடையாக இருக்குமென்று தேவன் எண்ணினாரே அதை ஏற்கனவே எடுத்துப் போட்டார். ஆனால், இவர்கள் அதை உணராமல் எடுத்துப் போடப்பட்ட தடை இன்னும் இருக்கிறதாக எண்ணிப் பேசிக் கொண்டு நடந்துள்ளார்கள்.

இப்பெண்கள் இயேசுவின் மீது பக்தி கொண்டார்கள். இயேசுவுக்காகச் செயல்படத் தீர்மானித்தார்கள். தீர்மானித்தபடி செயல்படவும் ஆரம்பித் தார்கள். ஆனாலும், தாங்கள் நேசிக்கிற இயேசுவாலும், இயேசுவை அனுப் பின தேவனாலும் என்ன முடியும், என்ன முடியாது என்பது குறித்த ஆவிக் குரிய அறிவு குறைந்து காணப்பட்டார்கள். இயேசுவின் பிறப்பின் செய்தி அறிவிக்கப்பட்ட போதே " **தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை** " என்பது

பகிரங்கப் படுத்தப்பட்டது ( லூக்- 1 ; 37 ) இந்தச் செய்தியெல்லாம் இவர்களுக்கு எட்ட வேண்டிய அளவுக்கு எட்டியிருந்தால் இப்படிப்பட்ட பேச்சுக்கு அங்கே அவசியமில்லாமல் போயிருக்கும் ". அப்படித்தானே!

அருமையானவர்களே! பல நேரங்களில் தேவன் மீதும், இயேசுவின் மீதும் நம்பிக்கையுடைய நாம் இப்படித்தான் வாழ்ந்து கொண்டுள்ளோம். " நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்ய வல்லவர் " (எபே - 3 : 20) நமக்கு இருக்கிறார் என்பதையும்," தடைகளை நீக்கிப் போடுகிறவர் " நமக்கு முன்னே நடக் கிறார் என்பதையும் நாம் மறந்தவர்களாக நம்முடைய பக்தி வாழ்க்கையை நடப்பித்துக் கொண்டுள்ளோம். ஆகவேதான், கல்லறைக்குச் சென்ற அந்தப் பெண்களைப் போல, " இல்லாதவைகளை இருக்கிறதாக எண்ணி தேவையில்லாத கவலைகளோடு வாழ்ந்து கொண்டுள்ளோம் ".

அன்பானவர்களே! தேவனும், அவருடைய குமாரனாகிய இயேசுவும் அவரை நம்பி வாழ்கிறவர்களின் தேவைகளையும், சூழ்நிலைகளையும் அறிகிறவராகவே இருக்கிறார்கள். புகழ்மிக்க மலைப் பிரசங்கத்தின் ஊடே இயேசு வெளிப்படுத்தின இவ்வார்த்தைகளைப் பாருங்கள். " **உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்** " (மத் .6 : 8). அப்படி அறிந்த தேவன்தான் கல்லறைக்குச் செல்லும் ஸ்திரீகளுக்குக் கல் தடையாக இருக்குமென்று எண்ணி அவர்களுக்காக ஏற்கனவே எடுத்துப் போட்டார். நம் தேவன் நம்மைக் காண்கிறவர். நம் சூழ்நிலைகளைத் தெரிந்தவர். நம் பிரச்சனைகளை அறிந்தவர். நமக்காகச் செயல்படுகிறவர். ஆகவே, சர்வ வல்ல தேவன் தீர்த்து விட்ட பிரச்சனைகளை இன்னும் இருக்கிறதாக எண்ணி நாம் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடாது. தேவனுடைய வல்லமை யிலும் அவருடைய செயல்பாட்டிலும் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும்.

### II. அற்பமானவர்களை தேவன் தனக்காகப் பயன்படுத்துகிறார்.

இயேசுவானவர் உயிர்த்தெழுந்த சம்பவத்திலிருந்து, மாற்கு நற்செய்தியாளன் மூலம் நமக்குக் கிடைக்கும் இரண்டாம் பாடம், அற்பமானவர்களைத் தேவன் தமக்காகப் பயன்படுத்துகிறார் என்பது.

இங்கே வசனத்தைப் பாருங்கள். "வாரத்தின் முதலாம் நாள் அதி காலையிலே இயேசு எழுந்திருந்த பின்பு, மகதலேனா மரியாளுக்கு **முதல் முதல் தரிசனமானார்.** அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தி யிருந்தார். அவள் புறப்பட்டு அவரோடே கூட இருந்தவர்கள் துக்கப்பட்டு

அழுது கொண்டிருக்கையில், அவர்களிடத்தில் போய், அந்தச் செய்தியை அறிவித்தாள் என்றுள்ளது. (மாற்கு 16 : 9 , 10). எப்படியிருந்தாலும் யாரோ ஒருவருக்குத்தானே முதல் முதல் தரிசனமாக முடியும். அது மகதலேனா மரியாளாக அமைந்து விட்டது. இதிலென்ன சிறப்பு இருக்கிறதென்று மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது எண்ணத் தோன்றும். ஆனால், " மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார் " என்ற தகவலோடு வசனங்கள் முடிந்திருந்தால் ஒருவேளை அப்படி எண்ணுவதில் பெரிதாக தவறு இருக்காது. ஆனால், " அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். " என்றும், " அவள் போய் " உயிர்தெழுந்த செய்தியை சீடர்களுக்கு அறிவித்தாள் என்றும் கூறுகிறது. மகதலேனா மரியாளிடமிருந்த ஏழு பிசாசுகள் துரத்தப்பட்டதை இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டுமென்ற கட்டாயம் கண்டிப்பாக இல்லை. சொல்லப்போனால், உயிர்த்தெழுந்த நாளின் செய்திக்கு அது அவசியமுமில்லை. ஆனாலும், ஆவியானவர் குறிப்பிட்டிருக்கிறார் என்றால் அதற்கு ஒரு நோக்கம் இருக்கவே வேண்டும். அதை நாம் காணத் தவறிவிடக் கூடாது.

ஏழு பிசாசுகள் பிடித்திருந்தவளென்பது அவள் எந்தளவு பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணாக இருந்திருக்கிறாள் என்பதை நமக்குச் சொல்லுகிறது. (மத். 12 : 45). பொதுவாக, இப்படி பாதிப்புக்குள்ளானவர்களுக்கு சமுதாயத்தில் எவ்வித மரியாதையும், மதிப்பும் இருக்காது. ஒருவேளை, தேவ தயவினால் அவர்கள் தங்கள் பிரச்சனைகளிலிருந்து மீண்டு வந்தாலும் கூட அப்படிப்பட்டவர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைத்து விடாது. யோவான் 9 – ம் அதிகாரத்தில் காணப்படும் **பிறவிக் குருடன்** இதற்கு மிகச்சிறந்த உதாரணம். "முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று தான் அவனைப் பார்த்து ஏசினார்கள் ". ( யோவான் 9 : 59 ). ஒருவேளை, மரியாளும் அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்திருக்கலாம். அவள் சுகம் பெற்று, தேவன் மீதும், இயேசுவின் மீதும் அளவுகடந்த பக்தி கொண்டிருந்தும், அவள் ஏழு பிசாசுகள் பிடித்திருந்தவள் என்ற காரணத்திற்காக சமுதாயத்தின் மதிப்பை இழந்தவளாகக் காணப்பட்டிருக்கலாம். ஆயினும், " மனுஷருள்ளத்திலிருப்பதை அறியும் வல்லமை கொண்ட இயேசு " (யோவான் 2 : 25), தன் உயிர்த் தெழுதலை முதல் முதல் வெளிப்படுத்தினதின் மூலம் அங்கே நியாயம் செய்தார். உயிர்த்தெழுதலின் செய்தியை சீடர்களுக்கு அறிவிக்கும் பாக்கியத்தையும் அவளுக்குத் தந்தார். நம் தேவனும், இரட்சகரும் எப்படிப்பட்டவர்களைக் கண்ணோக்குகிறார்கள் என்று பாருங்கள்!

அருமையானவர்களே! நாம் வாழும் சமுதாயம் எப்படிப் பட்டதா

யுள்ளது? இயேசுவின் காரியமாக ஒருவன் செயல்படுவதற்கு, தேவனுக்கு முன்பாக அவனுடைய இருதயத்தின் பக்திநிலை எப்படி இருக்கிறதென்பது கணக்கில் எடுத்துக் கொள்ளப் படாமல், சம்பந்தப்பட்டவர்ளுடைய பழைய வாழ்க்கையோ, முந்தின பக்தி நிலையோ முக்கிய இடம் பிடித்து விடுகிறது. ஆனால், இயேசுவின் பார்வை அப்படியிருக்கவில்லை. மனமாற்றம் உண் மையானதாகவும், பக்திச் செயல்பாடு சரியானதாகவும் இருக்கும் போது அதற்கு உரிய அங்கீகாரம் கொடுக்கிறார். வேறு எந்தத் தகுதியும் அங்கே பார்க்கப்படுவதில்லை. மகதலேனா மரியாள் இதற்குச் சிறந்த உதாரணம்.

ஆனால், நம்முடைய நாட்களின் நிலை விநோதமாக உள்ளது. இதை " நிலை " என்று சொல்லுவதை விட "அவல நிலை " என்று குறிப்பிடுவது தான் சரியாக இருக்கும். ஆம், சத்தியத்தைச் சொல்ல விரும்புகிறவர்களின் தகுதிகள் தராசில் நிறுத்திப் பார்க்கப்படுகிறது. பாரம்பரியம், படிப்பு, சமுதாயம், சமுதாய அந்தஸ்து, செல்வம், செல்வாக்கு என்று ஏகப்பட்ட காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இந்நிலை அடியோடு மாறவேண்டும். மதலேனா மரியாள் போய் சொன்ன உயிர்த்தெழுதலின் செய்தி, சம்பத்தப்பட்டவர்களால் ஏற்றுக் கொள்ளப்படாதது போல்தான் இன்றைக்கும் உண்மைச் சத்தியம் பற்றியும்,இரட்சிப்பு பற்றியும் சபை பற்றியும் சொல்லப்படுபவைகளைக் கிறிஸ்தவ சமுதாயம் புறக்கணித்துக் கொண்டுள்ளது. சிந்தித்து செயல்படுவோம்.

## IV. பக்தியுள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது

இயேசுவானவர் உயிர்த்தெழுந்த சம்பவத்திலிருந்து, மாற்கு நற்செய்தியாளன் மூலம் நமக்குக் கிடைக்கும் இன்னொரு பாடம், பக்தியுள்ளவர்களுக்கு தேவன் முதலிடம் கொடுக்கிறார் என்பது.

நாம் தெரிந்து கொண்ட நூலின் அதிகாரத்தின்படி பார்க்கும் போது, முதல் முதல் தரிசனம் ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து விடுதலை பெற்றிருந்த மகதேலேனா மரியாளுக்கு. பிறகு, எம்மாவு கிராமத்துக்கு நடந்து சென்ற இரண்டு சீடர்களுக்கு. அடுத்து இந்த இரண்டு சாட்சிகளையும் நம்ப மறுத்த பதினொருவருக்கு.

மாற்கு ஆசிரியரின் வரிசைப்படி பார்த்தால், ஒருவேளை அந்தப் பதினொருவரும் தன்னாலே தெரிந்து கொள்ளப்பட்டு, நேசிக்கப்பட்டு, போதிக்கப்பட்டவர்களாயிருந்தாலும், தான் பிடிக்கப்பட்டு, சிலுவையி லறையப்பட்ட நேரங்களில் அவர்களின் பக்திச் செயல்பாடு இருக்க வேண்டிய அளவு இல்லாமல் போனபடியால், தான் உயிர்த் தெழுந்தபோது

அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று இயேசு நினைக்க வில்லை. மாறாக, தன்னிடமிருந்து, ஏழு பிசாசுகள் துரத்தப்பட்ட நேரத் திலிருந்து, இயேசுவைத் தொடர்ந்து பின்பற்றுவதில் எவ்வித சமரசத்திற்கும் இடம் கொடுக்காமல், சிலுவை வரைக்கும் சென்று, பிறகு, தான் வாழ்ந்த பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின்படி ஓய்வுநாளில் ஓய்ந்திருந்து அதன் பிறகு, எப்பொழுது விடியும் என்று காத்திருந்து, கல்லறைக்கு வந்து சேர்ந்த மகதலேனா மரியாளுக்குத் தான் முதல் தரிசனம் தந்தார்.

பக்தியுள்ளவர்கள் தேவனுடைய பார்வையில் எப்பொழுதும் சிறப்பான வர்கள். இது பற்றி பக்தன் தாவீது சொல்லும் போது, " பக்தியுள்ள வர்களைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டார் என்று அறியுங்கள் " (சங். 4 : 3) என்று கூறுகிறார். தேவன் பக்தியுள்ளவர்களைக் கனப்படுத்துகிறார். எவ்வித சந்தேகமும் தேவையில்லை. இயேசுவானவர் யூதர் களுக்காக மட்டும் வராமல் எல்லோருக்காவும் வருகிறார் என்பது பழைய ஏற்பாடு தொடங்கி அறிவிக்கப்பட்ட செய்தி ( லூக். 2 : 10 ). ஆயினும், புறவினத் தாரிலிருந்து முதல் முதல் இயேசுவின் நற்செய்திக்குத் கீழ்ப் படிந்த கொலிநெர்யுவின் சிறப்பு என்ன என்று பார்க்கும் போது, " அவன் தேவ பக்தியுள்ளவன் " (அப். 10 : 1) என்று வேதம் வெளிச்சம் போடுகிறது.

அன்பானவர்களே! தேவன் பக்தியுள்ளவர்களைத் தெரிந்து கொண்டு கனப்படுத்தி ஆசீர்வதிக்கிறார். ஆயினும், தேவனிடமிருந்து ஆசீர்வாதமும், கனமும் வேண்டுமென ஆசைப்படும் நாம் தேவபக்தியை அற்பமாக எண்ணி, நம் கிறிஸ்தவ வாழ்க்கையை ஏனோதானோ என்று நடத்திக் கொண்டுள்ளோம். இது எப்படி நியாயமாகும். பவுலடியார் தீமோத் தேயுவுக்கு எழுதும் போது, தேவபக்தியின் நன்மையை இவ்விதம் விளக்கு வதையும் கவனியுங்கள். " ....**தேவ பக்திக்கேதுவாக முயற்சி பண்ணு.... தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தம் உள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது** " என்று. ( II தீமோ – 4 : 8). இதைவிட வேறென்ன வேண்டும்.

ஆகையால், இப்படிப்பட்ட தேவ பக்திக்கு நாம் நம்முடைய வாழ்வில் எல்லா வகையிலும் முன்னுரிமையும், முக்கயத்துவமும் கொடுத்து தேவ அங்கீகாரத்தோடும், ஆசீர்வாதத்தோடும் வாழ்வோமாக ! ஆமென் !!

# ஏன் நாங்கள் வாரத்தின் முதல் நாளில் கூடுகிறோம்?

J.C சோட்

**நா**ங்கள் கிறிஸ்தவர்களாக, கர்த்தருடைய சபையில் அங்கத்தினர்களாக தேவனை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது ( யோவான் 4 : 24 ). அதன் பொருள், நாங்கள் என்ன செய்கிறோமோ அதைப் புரிந்து கொண்டும், உண்மையாகவும் செய்யவேண்டும். மேலும், அதை நாங்கள் கர்த்தருடைய வார்த்தையின் போதனையின் படி செய்ய வேண்டும். ஆனால், கேள்வி என்னவென்றால்: அதை நாம் எப்போது செய்ய வேண்டும்? எத்தனை நாளுக்கு ஒரு முறை செய்ய வேண்டும்? அது வெள்ளிக்கிழமையாக, சனிக்கிழமையாக, ஞாயிற்றுக்கிழமையாக அல்லது வாரத்தின் வேறு ஏதாவது கிழமைகளில் இருக்கலாமா, நாம் ஆராதிக்கும் போது என்ன கிழமையில் ஆராதிக்கிறோம் என்பது உண்மையாகவே அவ்வளவு முக்கியமானதா?

பழைய ஏற்பாட்டில் நாம் வாசிக்கும் போது, தேவன் தம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர்களுக்கு ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார். இது பத்து கட்டளைகளில் ஒன்றாக இருந்தது (யாத்திரா கமம் 20 : 14 ; எபிரெயர் 9 : 15 – 17). ஆகவே, பழைய பிரமாணம் நீக்கப்பட்டபோது, அதற்கு பதிலாக புதிய பிரமாணம் கொடுக்கப்பட்டது. இது உண்மையாயிருக்க, தேவனுடைய ஜனங்களைக் கட்டுப்படுத்திய ஓய்வு நாள் முடிந்து போய், கர்த்தர் தம்முடைய ஜனங்கள் கூடி வரவேண்டுமென்ற நோக்கத்திற்காக புதிய நாளை அறிமுகப்படுத்தினார். அந்த நாள் வாரத்தின் முதல் நாளாயிருந்தது. பழைய ஏற்பாட்டில் ஓய்வு நாள் என்பது சனிக்கிழமை அல்லது வாரத்தின் ஏழாம் நாளாக இருந்தது. ஆனால், இப்பொழுது கர்த்தர், ஆராதனையிலும், மற்ற எல்லாவற்றிலும் கிறிஸ்துவை முதலில் வைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்.

வாரத்தின் முதல் நாளைப் பற்றி சொல்வதற்கு வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டு பகுதியில் நிறைய இருக்கிறது. இப்போது நாம் இந்த நாள் ஏன் அவ்வளவு முக்கியமானது என்பதையும், ஆராதனைக்காக ஏன் வாரத்தின் முதல் நாளிலே கூடி வரவேண்டும் என்பதற்கான காரணங்களையும் தெரிந்து கொள்ள கொஞ்ச நேரத்தை எடுத்துக் கொள்ளலாம்.

முதலாவது, கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே உயிர்த்தெழுந்தார். ஓய்வு நாள் வாரத்தின் பரிசுத்த நாளாக இருந்தால் அல்லது தேவனுடைய ஜனங்கள் தேவனை ஆராதிக்கும் நாளாக ஓய்வு நாள் இன்னும் இருந்திருந்தால், வாரத்தின் முதல் நாளில் அல்லது ஞாயிற்றுக்கிழமையில் கிறிஸ்து ஏன் உயிர்த்தெழ வேண்டும்? நிச்சயமாகவே, ஓய்வு நாள் பரிசுத்த நாளாக இருந்தபடியால் தான் அன்று கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்று வாதம் செய்யலாம். ஆனால், ஓய்வு நாள் கட்டுப்படுத்துகிறதாக இருந்து, அந்நாளில் கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்திருந்தால் அது இன்றும் எவ்வளவு பரிசுத்தமாக இருந்திருக்கும்? உண்மையாகவே, கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே உயிர்த்தெழுந்தற்கான காரணம், அந்த நாள் ஆராதனையின் புதிய நாள் என அந்த நாளை வலியுறுத்தும்படியாகத்தான். நாம் மத்தேயு 28 : 1 – க்கு திருப்பும் போது இப்படியாக வாசிக்கிறோம். ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள். நாம் தொடர்ந்து வாசிக்கும் போது வாரத்தின் முதல் நாளில் கர்த்தர் உயிர்த் தெழுந்தார் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இதே அடிப்படை காரியத்தை நாம் மாற்கு 16 : 1, 2; லூக்கா 24 : 1, 2 மற்றும் யோவான் 20 : 1 – லும் வாசிக்கிறோம்.

இரண்டாவது, கிறிஸ்து வாரத்தின் முதல் நாளில் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தபிறகு, இரண்டு சந்தர்ப்பங்களில் தன்னுடைய சீஷர்களை சந்திப்பது பொருத்தமானது என கண்டிருக்கிறார். அந்த இரண்டு சந்தர்ப்பங்களுமே வாரத்தின் முதல் நாளாகவே இருந்துள்ளது. நாம் இப்படியாக வாசிக்கிறோம். " வாரத்தின் முதல்நாளாகிய அன்றையதினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார், அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும், விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள் " ( யோவான் 20 : 19, 20 ). மீண்டுமாக, நாம் இப்படி வாசிக்கிறோம். " மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு, அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும்அவர்களுடனே கூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி; நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு

அவிசுவாசி யாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோம அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய் காணாதிருந்தும் விசுவாசிக் கிறவர்கள் பாக்கியவான்கள் " என்றார் (யோவான் 20 : 26 – 29)

இப்பொழுது, வாரத்தின் முதல் நாளில் இயேசு கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்து, அதே சாயங்காலத்தில் சீஷர்களுக்கு முன்பாக தோன்றி யிருக்கும்போது, மறுபடியும் இயேசு வாரத்தின் முதல் நாளில் அவர்களை சந்தித்தார் என பொருள்படாதா? வாரத்தின் முதல் நாளுக்கு எவ்வித முக்கி யத்துவமும் இல்லையென்றால், இவைகள் எல்லாம் வாரத்தின் முதல் நாளில் நடந்தது என வேதவாக்கியங்கள் வலியுருத்துவது விநோதமாக அல்லவா இருக்கும்? வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்து கல்லறையிலி ருந்து உயிர்த்தெழுந்தார் என்ற உண்மைக்கும், முதல் நாளில் இரண்டு சந் தர்ப்பங்களில் இயேசு தம்முடைய சீஷர்களைச் சந்தித்தார் என்ற உண் மைக்கும் இடையே மிகப்பெரிய முக்கியத்துவம் சம்பந்தப்பட்டிருக்கிறது என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மூன்றாவது, பெந்தெகொஸ்தே எப்போதும் பஸ்கா பண்டிகை முடிந்து, ஐம்பதாவது நாளாகிய வாரத்தின் முதல் நாளில்தான் வரும். இதன் பொருள், அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தின்படி, கர்த்தர் வாரத்தின் முதல் நாளை அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியை அனுப்பு வதற்கும், இரட்சிக்கப்படுவதற்கும், ஆண்களும், பெண்களும் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கும்படியான நற்செய்தியை உண்மை யில் முதன் முதல் பிரசிங்கிப்பதற்கும், சபை ஸ்தாபிக்கப்படுவதற்கும் கர்த்தர் வாரத்தின் முதல் நாளைத் தெரிந்தெடுத்தார். இங்கே இது வாரத்தின் முதல் நாளிற்க்கு எந்த முக்கியத்துவத்தையும் கொடுக்கவில்லையென் றால், வேறு எதற்கு முக்கியத்துவம் கொடுக்கும்? வாரத்தின் மற்ற நாட் களைக் காட்டிலும் முதுல் நாள் தெரிந்து கொள்ளப்பட்டிருப்பதற்கு ஏதாவது சிறப்புக் காரணம் இருக்க வேண்டும். உதாரணமாக, ஓய்வு நாள் இன்னும் கட்டுப்படுத்துகிறதாக இருந்தால், அதற்குப் பின்வரும் நாளுக்குப் பதிலாக அந்த நாளையே கர்த்தர் ஏன் தெரிந்து கொள்ளவில்லை? கிறி ஸ்துவின் காலத்தில், கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழாக வாரத்தின் முதல் நாள் ஆராதிக்கும் நாளாக இருக்கும்படி, வாரத்தின் முதல் நாளைக் கொண்டு ஓய்வு நாள் மாற்றுப்பட்டாயிற்று.

நான்காவது,ஆதிக்கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்கும்படி வாரத் தின் முதல் நாளில் கூடினதற்கான எடுத்துக்காட்டு நமக்கு இருக்கிறது,

“வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கை யில்,பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பா ஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் “ ( அப். 20:7 ). இந்த வசனத்தின் பின்னணியைப் பார்த்தால், பிலிப்பி பட்டணத்திலிருந்து கப்பல் மூலமாக பவுலும் மற்றவர்களும் துரோவா பட்டணத்திற்கு வந் தார்கள். வாரத்தின் முதல் நாளிலே சபை கூடி வரும் படியாக அங்கே ஏழு நாட்கள் தங்கியிருந்தார்கள். ஓய்வு நாளோ அல்லது வேறுநாளோ ஆரா தனை நாள ாக இருந்திருந்தால், ஆராதனைக்காக அங்கே இருந்த கிறிஸ் தவர்களோடு கூடி ஆராதித்துவிட்டு தங்கள் பயணத்தைத் தொடர்ந் திருப்பார்கள். அதற்குப் பதிலாக, கர்த்தர் தம் முடைய ஜனங்கள் தம்மை ஆராதிப்பதற்காக கூடிவர நியமித்திருந்த வாரத்தின் முதல் நாளிலே கர்த்தரை ஆராதிப்பதற்க்கு, காத்திருந்தார்கள். அதன் பின்பு அந்த நாளில் என்ன நடந்தது? அந்த நாளில் ஒரு காரியத்திற்காக சீஷர்கள் கூடி வந்திருந் தார்கள். அவர்கள் ஏன் கூடி வந்தார்கள்? வேதவசனம் அவர்கள் அப்பம் பிட்கும்படி கூடி வந்தார்கள் என்று சொல்கிறது, இது கிறிஸ்துவின் சரீர த்தையும், இரத்தத்தையும் நினைவு கூரும்படியான கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறு வதைக் குறிக்கிறது ( I கொரிந்தியர் 11 : 23-29 ). அதன் பொருள், நாம் வேதாகம உதாரணத்தின்படி, கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் தான் அப்பம்பிட்க வேண்டும் என்று போதிக்கப் பட்டி ருக்கிறோம். வாரத்தின் எந்த முதல் நாள்? நிச்சயமாக, வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளும் தான்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஓய்வு நாள் ஆராதனை நாளாக இருந்த போது, ஒவ்வொரு ஓய்வு நாளையும் ஆசரிக்க நினைக்கும் படி தேவன் சொல்லவில்லை. மாறாக, ஓய்வு நாளை ஆசரிக்க நினைப்பாயாக என்று மட்டும் தான் சொன்னார். அவர்களுக்கு அந்த நாளை ஆசரிக்க நினைப்ப தென்பது, ஒவ்வொரு ஓய்வு நாளையும் ஆசரிக்க நினைக்க வேண்டும் என்று பொருள் பட்டது. இது வாரத்தின் முதல் நாள்தோறும், கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிற காரியத்திலும் உண்மையாயிருக்கிறது. அவர்கள் அங்கே கூடி வந்தபோது பிரசங்கமும் செய்யப்பட்டிருக்கிறது. பவுல் பிர சங்கித்ததாகவும், நடுராத்திரி வரை பிரசங்கித் ததாகவும் வசனம் சொல்கிறது. அவர்கள் ஜெபித்தார்கள் என்றும், பாடல் பாடினார்கள் என்றும் வேதவசனம் சொல்லாவிட்டாலும், அவர்கள் அவைகளைச் செய்தார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், பவுலும் அவருடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களும் அப்பம் பிட்கும்படியும், தேவனை ஆராதிக்கும்படியும் வாரத்தின் முதல் நாளில் கூடியிருந்தால், நாம் கிறிஸ்

தவர்களாக இருந்தால் இன்ற நாமும் அதே மாதிரியாகச் செய்ய வேண்டும்.

ஐந்தாவது, பவுல் தன்னுடைய நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர் களிடத்தில் வாரத்தின் முதல் நாளில் எதையாகிலும் சேர்த்து வைக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். " பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப்படும் தர்ம பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராத படிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னி டத்திலே சேர்த்து வைக்கக்கடவன் " ( கொரிந்தியர் 16:1,2). இங்கே பவுல் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்கும், கொரிந்துபட்டணத்து சபைக்கும், வாரத்தின் முதல் நாளில் அவர்கள் எதையாகிலும் தங்களிடத்தில் சேர்த்து வைக்க வேண்டும் அல்லது காணிக்கை கொடுக்க வேண்டும் என்று போதிப் பதை கவனியுங்கள். கொடுக்கிற மனப்பான்மையைக் குறித்து, அதாவது, எவ்வளவு கொடுக்கப்பட வேண்டும், கொடுத்தலுக்கான நோக்கம் என்று இப்படி பல காரியங்கள் சொல்ல முடியும். ஆனால், இப்போது நாம் முக்கியமா பார்க்க விரும்புவது தான். வேறு ஏதாவது நாளில் கொடுக்காமல் வாரத்தின் முதல் நாளில் மாத்திரம் நாம் ஏன் கொடுக்க வேண்டும் என்று ஆச்சரியமாக இருக்கிறதா? கிறிஸ்தவர்கள் ஆராதனைக்காக கூடி வர வேத வசனத்தின் அடிப்படையிலான ஒரு நாளாக இது இருந்தது. அப்படிக் கூடி வரும் போது, தங்களுடையவைகளிலிருந்து கர்த்தருக்கு கொடுக்க இது நல்ல நாளாகவும் இருந்தது. அது அப்படியே இன்றைக்கும் உண்மையாயிருக்கிறது.

நாம் பார்த்தவைகளைத் தொகுத்துப் பார்த்தால், வாரத்தின் முதல்நாள் பரிசுத்தநாளும் அல்ல, ஓய்வு நாளைப் போல ஓய்ந்திருக்க வேண்டிய நாளும் அல்ல, நிச்சயமாகவே இது ஓய்வு நாள் அல்ல. ஆனால் இந்த நாள் கர்த்தருடைய உயிர்த்தெழுதலினால் கனப்படுத்தப்பட்ட நாள், பரிசுத்த ஆவியானவர் இறங்குவதற்காகத் தெரிந்து கொள்ளப்பட்ட நாள், அது மட்டுமல்ல, இது கர்த்தர் தம்முடைய ஜனங்கள் தம்மை ஆராதிக்கும் படியாக கூடி வர அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு நாள். தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாளில் கூடி வருவதில் புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற மாதிரியைப் பின்பற்றுவதில் நாம் எந்த தவறும் செய்யக்கூடாது. கூடி வர இந்த நாளை நிராகரிப்பது தவறாகும்.

●

பெண்கள் பகுதி

# தனி வாழ்வில் தேவசித்தம்

ரேச்சல் இராஜநாயகம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே! இந்த புதிய வருடத்தின் நான்காவது மாதத்தைக் காணச் செய்த தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம். கிறிஸ்தவப் பெண்களாகிய நமக்கு வேத அறிவு மிக, மிக அத்தியாவசியமானது. வேகமாக சென்று கொண்டிருக்கும் இந்த அவசர உலகிலே வேதத்தை நின்று வாசிப்பதற்குக் கூட யாருக்கும் நேரமில்லை. ஆனால், பரிசுத்த வேத எழுத்துக்களில் இந்த வாழ்க்கைக்குரிய அனைத்து காரியங்களுக்கும் ஆலோசனைகளும், நம்மால் தீர்க்க முடியாத பிரச்சனைகள், கேள்விகளுக்கு பதில்களும் அடங்கியுள்ளதை பலராகிய நாம் அறியாமல் இருக்கிறோம். பிரியமானவர்களே! இம்மாதம் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் தேவ வழிநடத்துதல் தான் நடந்து கொண்டிருக்கிறது என்பது பற்றி பார்ப்போம்.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் அடிமைகளாயிருந்த காலம். யோசேப்பை அறியாத புதிய ராஜா தோன்றினவுடன் இஸ்ரவேலர்களின் எண்ணிக்கையிலும், அவர்களின் பலத்திலும் பொறாமை கொண்ட ராஜா எப்படியாவது இவர்களை ஒடுக்க வேண்டுமென்று ஒரு உபாயம் அதாவது தந்திரம் பண்ண வேண்டு மென்று எண்ணினார்.ஆனால் அவர்களை எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவாய் அவர்கள் பலுகிப் பெருகினார்கள். இதைக்கண்டு எரிச்சல் அடைந்த ராஜா இஸ்ரவேலரை மிகவும் கொடுமையாக நடத்தினான். இது போதாதென்று எபிரெய மருத்துவச்சிகள் இருவரை அழைத்து எபிரெய ஸ்தீரிகளுக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளை கொன்று போடச் சொல்லி கட்டளையிட்டான். இந்த விபரங்களை யாத்திராகமம் முதலாம் அதிகாரத்தில் நாம் காணமுடியும்.

இக்கால கட்டத்தில்தான் லேவியின் குடும்பத்தைச் சேர்ந்த அம்ராம் என்பவர் யோகெபேத்தை விவாகம் பண்ணி அழகான ஆண்

குழந்தையை பெற்றெடுத்தார்கள். பார்வோனின் கட்டளை இன்னும் அமுலில் இருந்தது. குழந்தை அழகுள்ளதென்று கண்டு மூன்று மாதம் ஒளித்து வைத்தார்கள். இதை எபிரெய ஆசிரியர் கூறும்போது " மோசே பிறந்த போது அவனுடைய தாய்தகப்பன்மார் அவன் அழகுள்ள பிள்ளை யென்று கண்டு, விசுவாசத்தினாலே ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப் படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள் " ( எபி 11 : 23 ) என்கிறார். பிறகு அதை ஒளித்து வைக்கக் கூடாமல் ஒரு நாணற்பெட்டியை எடுத்து அதற்கு பிசினும், கீலும் பூசி பிள்ளையை உள்ளே வைத்து நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். பிறகு அவன் சகோதரியாகிய மிரியாமை காவலுக்கு வைத்தான், பார்வோனின் குமாரத்தி ஸ்நானம் பண்ண நதிக்கு வந்து, பிள்ளையைப் பார்த்து, எடுத்து, அவள் தாயிடமே கொடுத்து வளர்த்தது என்று அனைத்துமே நாம் அறிந்த ஒன்றுதான் (யாத் 2 : 1 - 9 ). பார்வோனின் குமாரத்தி அவனை ஜலத்தினின்று எடுத்தேன் என்று சொல்லி அவனுக்கு " மோசே " என்று பேரிட்டாள். எப்படியோ மோசே தன் சொந்த தாயிடமே வளர்க்கப்பட்டான். அப் 7 ம் அதிகாரத்தில் ஸ்தேவான் மோசேயைப் பற்றி பேசுகையில் " மோசே பிறந்து திவ்விய சவுந்தரிய முள்ளவனாயிருந்து " (20) என்றும் " மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான் " (23) என்றும் கூறுகிறார்.

மோசேக்கு 40 வயதாயிருக்கும் போது ஒரு எபிரெயனுக்கும், எகிப்தியனுக்கும் இடையே நடந்த பிரச்சனையில் எகிப்தியனைக் கொன்று போட்டதினால் அவனுடைய வாழ்க்கைப் பாதை மாறியது. இதை எபிரெய ஆசிரியர் இவ்வாறாக கூறுகிறார். " விசுவாசத்தினாலே மோசே தான் பெரிய வனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து அநித்தியமான பாவசந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு " என்கிறார்.

மோசே எகிப்திலிருந்து தப்பி ஓடிவந்து மீதியான் தேசத்து வனாந்தரங்களில் ஓரேப் மலை இருக்கும் பகுதிக்கு வந்து சேருகிறான். அங்கே ஆசாரியனாகிய எத்திரோ வீட்டிற்கு வந்து (யாத் 2 : 21) அவனுடைய குமாரத்தியாகிய சிப்போராளை மணந்தான். மோசே இந்த மீதியான் வனாந்தரத்திலே தான் அடுத்த 40 ஆண்டுகளை கழிக்க வேண்டியதாயிற்று. இதே வனாந்தரத்தில் அதற்கடுத்த 40 ஆண்டுகள் இஸ்ரவேல் ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு வழிநடத்தும் பொறுப்பு மோசேக்கு காத்துக் கொண்டிருந்தது (யஸத் 2 : 23, 24, 25).

அருமையானவர்களே இந்த மோசேயினுடைய பிறப்பு, இளமைப் பருவம் இவைகளிலிருந்து நம்முடைய நன்மைக்கென்றும், நம்மை உற்சாகமூட்டுவதற்கும் பல பாடங்கள் உள்ளன. முதலாவதாக, மனிதர்களாகிய நம் ஒவ்வொருவர் வாழ்விலும் தேவன் இடைபடக்கூடியவராக இருக்கிறார். அரசனுடைய கட்டளையோ, அதிகார வட்டங்களோ, தேவனுடைய நோக்கங்களை அழித்துப்போட முடியவில்லை. பார்வோன் ராஜா ஆண்பிள்ளைகளையெல்லாம் கொன்றுபோட கட்டளையிட்டபோது மருத்துவச்சிகள் தேவனுக்கு பயந்து ராஜா சொன்னபடி செய்யாமற் போனார்கள் (யாத் 1 : 17). மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்து வைத்தார்கள். (எபி. 11 : 23). தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்? ( ரோமர் 8 : 31 ) என்று அப். பவுல் ரோமாபுரி சபையாருக்கு எழுதுகிறார் ஆபகூக் தீர்க்கன் மூலமாக தேவன் நமக்கு இவ்வாறு கூறுகிறார், " கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார். பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது " ( ஆபகூக் 2 : 20 ). நாகூம் தீர்க்கதரிசி இன்னும் உறுதியாக " கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை, தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார் (நாகூம் 1 : 7) என்கிறார்.

இரண்டாவதாக, இந்த மோசேயின் பிறப்பு, வளர்ப்பிலிருந்து நாம் அறிந்து கொள்ளும் மற்றொரு பாடம் என்னவெனில், ஒருவன் பாவத்தின் அடிமைத்தனத்தில் நீண்ட நாட்களாக இருக்கக்கூடாது. இஸ்ரவேல் மக்கள் அடிமைத் தனத்தின் கீழ் இருந்தார்கள். அடிமைத்தனத்திலிருந்து தாங்களாகவே தங்களை விடுவித்துக் கொள்ள இயலாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் அடிமைத்தனத்தினால் தவித்து நாளுக்கு நாள் முறையீடு அதிகரித்துக் கொண்டே வந்தது. பாரம் தாங்க முடியாமல் பெருமூச்சு விட்டார்கள். அவர்களுக்கு அவர்களாகவே செய்யக்கூடிய உதவி ஒன்றாகத்தானிருந்தது, அது தேவனை நோக்கி கதறி அழுவதுதான்.

இதே நிலைதான் இன்று நமக்கு முன்னும் இருக்கிறது. பாவத்திற்கு அடிமைகளாகி விடுவது மனிதர்களாகிய நமக்கு பழகிப்போன ஒன்று. எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானோம் ( ரோமர் 3 : 23 ) மோசேயை அனுப்பி இஸ்ரவேலரர்களை மீட்டதுபோல தேவன் தம் ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி நம்மை பாவத்திலிருந்து மீட்டார். யாத்திராகமத்தில் புஸ்தகம் மகா பெரிய சம்பவங்கள் நிறையவே உள்ளது. கர்த்தருடைய பிள்ளைகள் உபத்திரவங்களையும்

அனுபவித்தாலும் தேவனுக்கு உண்மையா யிருந்தால் நிறையவே உள்ளது.அவர்கள் பலுகிப் பெருகமுடியும். மனிதர்களுக்கு கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியும்போது அப்பேர்ப்பட்ட வர்களை தேவன் ஆசீர்வதிக்கிறார் (அப் 5 : 28, 29). பாடுகள், உபத்திரவம் என்று வரும்போது சபையார் உறுதியாக நிற்க வேண்டும். சோர்ந்துபோய் துவண்டு விடக்கூடாது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் வேண்டி ஜெபிக்கும்போது தேவன் ஜெபத்தைக் கேட்டு நம்மை விடுதலை செய்கிறார்.

அருமையானவர்களே! மோசேயின் தாயின் விசுவாசம்தான் ஒரு கூட்ட ஜனங்களின் விடுதலைக்கு காரணமாயிருந்தது. யாரும் நினைத்துக் கூட பார்க்கமுடியாத செயலை அவள் செய்திருக்கிறாள். தியாகம் என்பது இதுதான். தேவனை நம்பி பச்சிளங்குழந்தையை தண்ணீரில் விடுவது சாதாரண செயலா என்ன? ராஜாவின் கட்டளைக்கு பயப்படாமல் தேவன் மீது விசுவாசம் வைத்தது, தன் மகனை அங்கே காவலுக்கு வைத்து இப்படி எல்லா செயலுமே அவள் எப்படியாவது தேவன் தனக்கு இரங்குவார் என்று நம்பியிருந்ததையே காட்டுகிறது. இன்னும் அநேக பாடங்கள் இந்த மாபெரும் தலைவன் மோசேயின் வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்ள முடியும்.

வேதத்தை நன்றாக வாசிப்போம். வாழ்க்கைக்கு பயன்படுத்துவோம். தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென்!!

---

## பாவம் ! பாவம் !!

பாவம் நம்மிடமிருந்து எவைகளையெல்லாம் கொள்ளையிடுகிறது :

- தேவனுடனான உறவை
- நம்முடைய குணாதிசயத்தை
- நம்முடைய முடிவெடுக்கும் திறனை
- நம்முடைய சுய மரியாதையை
- நம்முடைய சமாதான வாழ்வை
- நம்முடைய ஆவிக்குரிய வாழ்வை
- இறுதியில் நம்முடைய நித்திய ஜீவனை
- ஆகவே, எச்சரிக்கையாயிருப்போம்!

வாலிபர் பகுதி

# மாதிரியின் மாண்பு

Bro. பென்னி மார்ட்டின்

**பி**ரியமான வாலிப உள்ளங்களே! உங்கள் யாவருக்கும் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நல்நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாகச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அருமையானவர்களே! இன்றைய நாட்களில் பெரும்பாலான வாலிபர்கள் திரைப்பட நட்சத்திரங்களை விளையாட்டு வீரர்களை, அரசியல் தலைவர்களை தங்கள் மாதிரிகளாக ஏற்றுக்கொண்டு செயல்படுகிறார்கள். இதன் காரணமாக பல வாலிபர்களின் வாழ்க்கை அந்தரங்கத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கிறதை நம்மால் காண முடியும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வைத்துப் போன மாதிரியை நாம் பின்பற்றும் போது, பிரபலமானவர்களின் மாதிரியெல்லாம் அவசியமில்லை, நாம்தான் அவர்களுக்கு ஆதர்ச ஒளியை வீசமுடியும். இருள் சூழ்ந்த இவ்வுலகில் சுவிசேமென்னும் ஒளியை வீசச்செய்து மாதிரியாக இருப்போம். அப்போஸ்தலனாகிய பவுல் தான் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தமக்குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும் போது “ நீ வார்த்தையிலும் நடக்கையிலும் அன்பிலும் ஆவியிலும் விசுவாசத்திலும் கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு ” என்று எழுதுகிறார் ( I தீமோத்தேயு 4 : 12 ). இங்கே வாலிபனாகிய தீமோத்தேயு மட்டுமல்ல, வாலிபர்களாகிய நாம் ஒவ்வொருவரும் விசவாசிகளுக்கும் இந்த உலகத்தாருக்கும் மாதிரியாக இருக்க வேண்டுமென்பதைத் தான் இது வலியுறுத்துகிறது. நாம் எப்படி போதிக்கப்படுகிறோமே அப்படியே நடக்கவேண்டும். நாம் அப்படிச் செய்யவில்லையென்றால் நம் கிரியைகளினிமித்தம் தேவனுடைய நாமம் துஷிக்கப்படும் (ரோமர் 2:17,24 ). இப்போது நாம் எவைகளிலெல்லாம் விசுவாசிகளுக்கு மாதிரியாக இருக்க வேண்டுமென்று ஒவ்வொன்றாகப் பார்போம்.

### I. வார்த்தையில் மாதிரியாக இருக்கவேண்டும்

நாம் ஒவ்வொருவரும் பேசுகிற வார்த்தைகளைக் குறித்து ஜாக்கிரதை

யாக இருக்கவேண்டும். நாம் தேவையற்ற வீணான வார்த்தைகளைப் பேச க்கூடாது. நம் வார்த்தைகளை எல்லோரும் கவனிக்கிறார்கள் என்பதை உணர்ந்து பேச வேண்டும் கிறிஸ்தவர்களாகிய நாம் நம் வார்த்தை களினாலே நீதிமான்கள் என்றும், குற்றவாளிகள் என்றும் தீர்க்கப்படுவோம் ( மத். 12 : 37 ). எனவே, நாம் கேட்கிறவர்களுக்கு பிரயோஜனம் உண்டாகும்படி பக்திவிருத்திக்கு ஏதுவாக நல்ல வார்த்தைகளை பேச வேண்டும் (எபே 4 : 29).

### II. நடக்கையில் மாதிரியாக இருக்கவேண்டும்.

வாலிபர்களாகிய நம்முடைய நடக்கை கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப் பாத்திரமாக இருக்கவேண்டும் (பிலிப் 1: 27). இவ்வுலகத்தின் மக்கள் கிறிஸ் துவின் உபதேசத்தை மிக உயர்வாகக் கருதுகிறார்கள். அவர்கள் தத்துவ ஞானிகளின் உபதேசங்களை உதறித்தள்ளிவிட்டு கிறிஸ்துவின் உப தேசத்திற்குச் செவிசாய்க்க வேண்டுமென்றால் நாம் அதற்குப் பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டும். இன்றைய நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் தாறுமாறாக நடந்து கிறிஸ்துவின் உபதேசத்தை தூஷித்து கொண்டிருக் கிறார்கள். நாம் நல்நடக்கையினால் அநேகரை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற வாழ்க்கையை வாழவேண்டும். நாம் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிருகிறார் (Iபேதுரு1 : 16).

### III.அன்பில் மாதிரியாக இருக்க வேண்டும்

நாம் அன்பில் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்கவேண்டும். இங்கே அன்பை நாம் மூன்று விதமாகப் பிரித்து விடலாம். ஒன்று நாம் முழு இருதயத்தோடும் முழுமனதோடும் முழு பலத்தோடும் அன்பு கூருவதில் சிறந்து விளங்கி அதில் விசுவாசிகளுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூர வேண்டும் என்று வேத வசனம் சொல்லுகிறது ( I பேதுரு 1 : 22 ). இதில் சத்துருக்களைச் சிநேகிப்பது உலகத்தின் மக்களால் முடியாத காரியம். எனவே இதில் நாம் மாதிரியாக இருந்து விட்டால் கிறிஸ்தவத்தை நம்மால் உயர்த்திக்காட்ட முடியும். பாவத்தில் மரித்தவர்களை நாம் நேசித்து அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதினால் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் அவர்களுடைய பாவங்கள் கழுவப் பட முடியும். அவர்கள் இவ்வுலகிலும் சிறந்த வாழ்க்கையை வாழ முடியும்.

### IV. ஆவியில் மாதிரியாக இருக்க வேண்டும்

இங்கே ஆவி என்பது மனநிலை அல்லது மனப்பான்மையைக் குறிக்

கிறது. வாலிபர்காளாகிய நாம் விட்டுக்கொடுக்கிற மனப்பான்மையைப் பெற்றிருக்க வேண்டும். இன்று வாலிபர்கள் மத்தியில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை அறவே இல்லை என்னும் குற்றச்சாட்டு உண்டு.

அதேபோல் நாம் மற்றவர்களிடத்தில் கரிசனை உடையவர்களாக காணப்ப டவேண்டும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து கிறிஸ்துவின் பிரமாணத் தை நிறைவேற்றுகிறவர்களாக இருக்க வேண்டும் (கலா 6 : 12). சுருக்கமாகச் சொன்னால், நாம் கிறிஸ்துவின் சிந்தையை உடையவர் களாக இருக்க வேண்டும். இவ்வுலகில் காணப்படும் கூச்சல், குழப்பம், சண்டைகள், யுத்தங்கள் எல்லாவற்றிருக்கும் காரணம் கிறிஸ்துவின் சிந்தை இல்லாதது தான். எல்லோருமே கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக் கொண்டால் இவ்வுலகம் எவ்வளவு அழகானதாக, இன்பமானதாக இருக்கும்!

### V. விசுவாசத்தில் மாதிரியாக இருக்க வேண்டும்

நம்முடைய விசுவாசம் பிறர் தேவனிடத்தில் விசுவாசமாயிருப்பதற்கு தூண்டுகோலாக அமைய வேண்டும். விசுவாசம் என்பது எபி 11:1 ன்படி நம் பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக் கிறது. வேதாகமத்தில் நாம் பார்க்கும்போது வேததாசர்கள் தேவன் மீது விசு வாசம் வைத்து வாழ்ந்தார்கள் என்று பார்க்கிறோம். நம் விசுவாசம் பிறர் காணத்தக்கதாக இருக்கவேண்டும். நாம் தேவனுடைய சித்தத்தின்படி செய் யும்போது அவர் நமக்குச் செய்த வாக்குதத்தங்களையெல்லாம் நிறை வேற் றுவார் என்று விசுவாசிக்க வேண்டும். விசவாசத்தின் தகப்பனாகிய ஆபிரக ாம் விசுவாசத்தினாலே தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்கு போ கும்படி அழைக்கப்படபோது கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்ன தென் று அறியாமல் புறப்பட்டுப்போனான் என்று பார்க்கிறோம் (எபி11:8). அப்படிப் பட்ட விசுவாசத்தை நாம் உடையவர்களாக இருக்கும்போது பிறர் அதைக் கண்டு தேவனிடத்தில் விசுவாசம் வைப்பதற்குத் தூண்டப்படுவார்கள்.

### VI. கற்பில் மாதிரியாக இருக்க வேண்டும்

வாலிபர்களாகிய நாம் எல்லாவிதத்திலும் நம் கற்பைக் காத்துக் கொள்ள வேண்டும். இந்த உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்று நாம் அறிந்திருக்கிறோம். பாவம் நிறைந்த இவ்வுலகில் நம்மை நாம் கறைப்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். எல்லாவித வேசித்தனத்துக்கும் நாம் விலகியோட வேண்டுமென்று தேவன் நமக்குக்கட்டளையிடுகிறார் (I தீமோ

2 : 22) நம் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம் கர்த்தராகிய இயேசு வரும்போது குற்றமற்ற தாயிருக்கும்படி காக்கப்படுவதாக (I தெச 5 : 23).

பிரியாமான வாலிபர்களே! மேற்சொல்லப்பட்ட ஆறுகாரியங்களில் நீங்கள் விசுவாசிகளுக்கும் இவ்வுலகத்தின் மக்களுக்கும் மாதிரியாக இருந்தால் பலரை கிறிஸ்துவுக்குள்ளாக உங்களால் வழிநடத்த முடியும், புறஜாதிகள் மத்தியில் தேவனுடைய நாமம் மகிமைப்படும். எனவே, தீவிரமாக நாம் செயல்பட்டு மற்றவர்களுக்கு மாதிரியைக் காண்பிப்போம். தேவன்தாமே அதற்கு உதவி செய்வாராக! ஆமென்.

---

# நாம் அழைக்கப்பட்டவர்கள்

- ☞ நாம் அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு **அழைக்கப்பட்டிருக்கிறோம்** (I பேதுரு 2 : 9)
- ☞ நாம் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படியாக **அழைக்கப்பட்டிருக்கிறோம்** (I பேதுரு 2 : 21)
- ☞ நாம் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி **அழைக்கப்பட்டிருக்கிறோம்** (I பேதுரு 3 : 9)
- ☞ நாம் நம் நடக்கையிலும், பேச்சிலும் பரிசுத்தமாயிருக்கும்படி **அழைக்கப்பட்டிருக்கிறோம்** (I பேதுரு 1 : 15)
- ☞ நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனுடைய நித்திய மகிமைக்கு **அழைக்கப்பட்டிருக்கிறோம்** (I பேதுரு 5 : 10)
- ☞ எனவே, நாம் **அழைக்கப்பட்ட அழைப்புக்குப்** பாத்திரவான்களாய் நடந்து கொள்வோம் (எபேசியர் 4 : 1)

சிறுவர் பகுதி

# உசியா ராஜா

Bro. ஏபில் நாயகம்

**பி**ரியமான பிள்ளைகளே! உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். அனைவரும் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். பள்ளியாண்டு முடிந்து கோடை விடுமுறை நாட்களை ஜாலியாக கழித்து வருகிறீர்களா? சரி, எங்கே சென்றாலும் எதைச் செய்தாலும் பாதுகாப்பாக இருங்கள். நான் உங்கள் நேரத்தை அதிகமாக எடுக்கப் போவது இல்லை. நாம் இந்த மாதத்திற்கான பாடத்தை படிக்கலாம் வாங்க!

II நாளாகமம் 26 ம் அதிகாரம் உசியா என்று பெயர் கொண்ட ஒரு ராஜாவைப் பற்றி வேதம் நமக்கு கூறுகிறது. இந்த ராஜா யூதாதேசத்தை ஆண்ட நல்ல இராஜாக்களில் ஒருவர். சரி, இவரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளப்போகும் பாடம் என்னவென்று இப்பொழுது பார்க்கலாமா?

இந்த உசியா தனக்கு 16 வயது இருக்கும் போதே யூதா தேசத்திற்கு ராஜாவானான். உசியாவின் தந்தையின் பெயர் அமத்சியா, அவன் தாயின் பெயர் எக்கொலியாள். உசியா 52 வருடங்கள் அரசாண்டான். இந்த உசியா கர்த்தராகிய தேவனுடைய பார்வைக்கு செம்மையான காரியங் களை, செய்தான். தேவனும் அவன் செய்த எல்லாக் காரியங் களிலும் அவனோடே இருந்தார். அவன் செய்த போர்களிலும் தேவன் உசியாவின் பக்கம் நின்று வெற்றிகளைக் கொடுத்தார். இவர் சிறந்த போர் வீரனாக இருந்தார். அவனுடைய புகழ் வெகு தூரம் பரவி வந்தது.

இப்படியாக அவனுக்குப் பெயரும் புகழும் வெற்றியும் கிடைத்ததற்கு பிற்பாடு, அவனுக்கு பெருமையும், மனமேட்டிமையும் வந்துவிட்டது. தேவ னுக்கு பிரியமாய் நடந்து வந்த உசியா, தேவனுடைய பிரமாணங்களை மீறி நடக்க ஆரம்பித்தான். மீறி நடந்தால் என்ன ஆகும்? வேறென்ன, தண்டனைதான். என்ன தண்டனை என்று கேட்கிறீர்களா? அவனுக்கு குஷ்டம் பிடித்தது. அவன் குஷ்டரோகியாக மாறினான். அவனுக்கு குஷ்டம்

பிடித்தபடியினால் ராஜா ஸ்தானத்திலிருந்து இறக்கப்பட்டான். அவன் தன் மரணம் மட்டும் குஷ்டரோகியாகவே இருந்தான்.

இதுதான் உசியா ராஜாவின் சரித்திரம். சரி இதிலிருந்து நாம் என்ன பாடத்தை கற்றுக்கொள்ளப் போகிறோம்? பிள்ளைகளே, உசியா தேவனுடைய கட்டளைகளைக் **கைக்கொண்ட போது தேவன் அவனை பிரபலப்படுத்தினார்**. அதே தேவன், அவருடைய கட்டளைகளை மீறின போது அவனை தண்டித்தார்.

நீதி 16:18 ம் வசனத்திற்கு மிகப் பொருத்தமான உதாரணம் உசியா தான். " அழிவுக்கு முன்னானது அகந்தை ; விழுதலுக்கு முன்னானது மன மேட்டிமை.

ஆகையால், அருமையான பிள்ளைகளே, நானும் நீங்களும் உசியாவைப் போல் இல்லாமல் எந்த நிலைமையி லும் பெருமையில்லாமல் கடைசி வரைக்கும் கர்த்தரின் கட்டளையை கைக் கொண்டு தேவனுக்கு பிரியமான பிள்ளைகளாய் நடப்போம். சரியா?

**Bye குட்டிஸ் ! Happy Vacation**

குறிப்பு:- மே மாதம் 2,3,4 தேதிகளில் நடக்கவிருக்கும் வேனிற்கால வேதாகம முகாமில் நீங்கள் தவறாமல் கலந்து கொள்ள நாங்கள் ஜெபிக்கிறோம். பெற்றோர்களோடு சேர்ந்து திட்டமிடுங்கள்!

## நாளும், நடப்பும்

- நாடு முழுவதும் சுட்டெரிக்கும் வெயில் ஒடிசா - தெலுங்கானாவில் அனல் காற்றுக்கு 65 பேர் பலி
- கச்சத்தீவை மீட்போம் என்று அரசியல் கட்சிகள் போட்டிபோட்டு அறிவிப்பு.
- வட்டி விகிதம் மேலும் குறைய வாய்ப்பு - ரிசர்வ் வங்கி கவர்னர்.
- நேபாள உச்ச நீதிமன்றத்திற்குப் பெண் தலைமை நீதிபதி.
- கிரிக்கெட் உலகின் புதிய அவதாரமாக இந்தியாவின் 18 வயது சர்ஃ பிராஸ்கான் உருவாகி வருகிறார்.

வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

# ராஜாவின் குமாரனுடைய கலியாணம்

Bro. K. பாஸ்கர்

**தி**ருமறை ஆசான் வாசகர்களே! ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். பரலோகத் தேவன் தமது குமாரனான கிறிஸ்துவுக்கு கிறிஸ்துவின் மணவாட்டியான கிறிஸ்துவின் சபையை மண முடிக்கும் இனிய சம்பவத்தை இந்த மாதம் உவமையில் தெரிந்து கொண்டு வசனரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்ளுவோம்!

I **உவமை** (மத்தேயு 22 : 1 - 14)

இயேசு மறுபடியும் அவர்களோடே உவமைகளாய்ப் பேசிச் சொன்னது என்னவெனில், பரலோக ராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணம் செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாகிறது. அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான். அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள். அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து நீங்கள் போய் இதோ என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன். என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது. எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள் என்று அனுப்பினான். அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டை பண்ணி ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய் விட்டார்கள். மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து அவமானப்படுத்தி கேலி செய்தார்கள். ராஜா அதைக் கேள்விப்பட்டு கோபமடைந்து தன் சேனைகளை அனுப்பி அந்தக் கொலைபாதகரை அழித்து அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான். அப்பொழுது அவன் தன் ஊழியக்காரரை நோக்கி கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது அழைக்கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப் போனார்கள். ஆகையால் நீங்கள் வழிச் சந்திகளிலே போய் காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றார் அந்த ஊழியக்காரர் புறப்பட்டு வழிகளிலே போய் தாங்கள் கண்ட நல்லார்

பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள் கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்த போது கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாமல் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான். அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது ராஜா பணிவிடைக்காரரை நோக்கி இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய் அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பாடு இருளிலே போடுங்கள் என்றான். அந்தப்படியே அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் சிலர் என்றார்.

### II கலியாணம்

இந்த உவமையில் வரும் ராஜா தேவனைக் குறிக்கிறது (மத் 5 : 35, 18 : 23, 21 : 28, 33 ) ராஜாவின் குமாரன் தேவனுடைய குமாரன் இயேசுக் கிறிஸ்துவைக் குறிக்கிறது ( 21 : 37 ) புதிய ஏற்பாட்டில் இயேசுவை மணவாளனக சித்தரித்துக் காட்டுகிறது (9 : 15, 25 : 1, யோ 3 : 29, எபே 5 : 27 ) ( வெளி 21 : 2, 9 ) மணவாளன் இயேசு கிறிஸ்துவுக்கு கற்புள்ள மணவாட்டியாக நாம் இருக்கிறோம் என்று பவுல் குறிப்பிகிறார் நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரு புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால் என்று குறிப்பிடுகிறார். ( எபே 5 : 28 ) பரலோகத்திலே தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுடன் கலியாணம் செய்யப் போகிறார். (வெளி 21 : 9) அது வரை நாம் பல அந்நிய உபதேசங்களால் கறை, திரை ஆகாமல் கற்புடன் பரிசுத்தமாக கிறிஸ்துவுக் காத்திருக்க வேண்டும். கிறிஸ்துவையும், கிறிஸ்துவின் சபையையும் தேவன் இணைத்திருக்கிறார். மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் (மத் 19 : 6) ஆனால், இன்று மனிதர்கள் பல சபைகளாகப் பிரித்துப் பார்க்கிறார்கள். ஆனாலும், அவை எல்லாவற்றையும், கிறிஸ்து நான் அறியேன் என்பார். (மத் 7 : 22, 23, 25 : 11, 12)

### II கலியாண விருந்து

இந்த உவமையில் வரும் ராஜா மிகவும் செல்வாக்குமிக்கவர், தாராளமனமுடையவர். எனவே, ராஜா இதோ என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன் என் எருதுகளும் கொழுத்த எருதுகளும் அடிக்கப்பட்டது எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைத்தார் ( மத் 22 : 4 ) ஆனால், அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டை பண்ணி ஒருவன் தன் வயதுக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். கலியாண விருந்து என்பது தேவ

னுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும் சம்பவம். ஆதலால் தான், பவுல் முதலில் யூதருக்கு அந்த வாய்ப்பைக் கொடுத்தார். ஆனால், அவர்கள் அதற்கு அபாத்திரராய் போனார்கள் (அப் 13 : 46). இந்த உவமையிலும் அழைக்கப்பட்டவர்கள் விருந்தை அசட்டை பண்ணினார்கள். உடனே ராஜா கோபமாய் தன் ஊழியக்காரரை நோக்கி ஆகையால் நீங்கள் வழிச் சந்து களிலே போய் காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள் என்றான். அந்த ஊழியக்காரரும் அப்படியே செய்தார். கலியாண சாலை விருந்தாளிகளால் நிறைந்தது. இது தேவனுடைய ராஜ்யத்திற்குள் அநேகர் பிரவேசிப்பதை சித்தரிக்கிறது சபையினுள் அநேகர் பிரவேசித்து சபை மக்களால் நிறைந்தது கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு விசேஷித்தது கலியாண வஸ்திரம் கொடுக்கப்பட்டது. இது இரட்சிப்பின் வஸ்திரமாக உள்ளது (ஏசாயா 61 : 10) (வெளி 3 : 18) விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்த போது: இது கிறிஸ்து நம்மை தேவனித்தில் சேர்ப்பது. அப்போது கலியாண வஸ்திரம் தனத்திராத அதாவது, இரட்சிக்கப்படாத, இரட்சிப்பின் வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனைக் கண்டு சிநேகிதனே நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான். அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது ராஜா பணிவிடைக்காரரை நோக்கி இவனைக்கையுங்காலும் கட்டி கொண்டுபோய் அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான். இது இவ்வுலக முடிவு காலத்தில் சம்பவிக்கும் நிகழ்ச்சியைக் கூறுகிறது. எனவே, இப்போது செயல்பட்டு வரும் பரலோக ராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபையிலே பிரவேசித்து முடிவு காலத்துக்கு ஆயத்தமாயிருப்போம். ஆட்டுக்குட்டியானவரின் திருமண விருந்தில் நாம் அனைவரும் பங்கு பெறுவோம் பரலோகத்தில் (வெளி 21 : 2, 9)

## மகிழ்ச்சி

மகிழ்ச்சி என்பது நம்மிடம் இருப்பவைகளை அடிப்படையாக வைத்து அமைவதில்லை, ஆனால் நம்மிடம் இருப்பவைகளைக் குறித்து நாம் எப்படி உணர்கிறோமோ அதை அடிப்படையாக வைத்துத்தான் அமைகிறது.

நாம் கொஞ்சத்தில் மகிழ்ச்சியாக இருக்கலாம், அதிகத்தில் துக்கமாகவும் இருக்கலாம்.

## இயேசு ஞானஸ்நானம் பெற்றது ஏன்?
## மத் 3:13 – 15;  21:23 – 27

**பே**தையை ஞானியாக்கும் தேவனுடைய வேதத்தின் புதிய ஏற்பாட்டுப் பிரிவில் முதல் புத்தகமாய் அமைய பெற்றிருக்கும் மத்தேயு நற்செய்தி நூலில் இயேசுவின் திருமுழுக்கைப் பற்றி இப்படி எழுதுகிறார். " அப்பொழுது யோவானால் ஞானஸ்ஸானம் பெறுவதற்கு இயேசு கலிலே யாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்கு தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க. நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்திரமாக: இப்பொழுது இடங்கொடு இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான் " (மத் 3 : 13 – 15)

இயேசு ஞானஸ்நானம் பெற்றது ஏன்? பாவம் அவரிடம் படிந்து இருந்தால் அவை மன்னிக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பெற்றாரா? ஞானஸ்நானமானது பாவ மன்னிப்புக்கென்று வேதாகமம் விளக்குகிறது ( அப் 2 : 38 . 2 : 16 ) இயேசு இப்படியாய் இன்மொழி கூறுகிறார். " விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரச்சிக்கப்படுவான் " ( மாற் 16 : 16 ) ஆதி திருச்சபையின் முதல் பிரசங்கத்தை முழங்கிய  பேதுரு. தனது முதல் நிருபத்தில் " அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது. இப்பொழுது நம்மையும் இரட்சிக்கிறது " என்கிறார் ( I பேதுரு 3 : 21 ).

வேதாகமம் இயேசுவை பற்றிக் கூறுகையில் " அவர் பாவம் அறியாதிருந்தார் " என்கிறது. மறுதலித்து பின்பு மனங்கசந்து அழுது மனந்திரும்பிய பேதுரு கூறுகையில். " அவர் பாவஞ்செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை " என்கிறார் ( I பேது 2 : 22 ) எபிரெய எழுத்தாளர் " எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும். பாவமில்லாதவராயிருந்தார் " என்கிறார் ( எபி 4 : 15 ) பாவம் அவரிடம் காணப்பட்டதால்  அது மன்னிக்கப்பட வேண்டும் என்பதற்காக திருமுழுக்குப் பெற்றிருந்தால். அவர் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறியிருக்கிறார் என்றுதானே அர்த்தமாகிறது (I யோ 3 : 4) ஆனால் இயேசு " ...... பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறேன் " என்றார் ( யோ 8 : 29 ) நமதாண்டவர் பாவஞ்செய்திருப்பார் என்றால் அவருக்கே இரட்சகர் தேவையாயிருக்கிறது. இரட்சகர் தேவைப்படுகின்ற ஒருவர் மற்றவர்களை இரட்சிக்கும் இரட்சகராக இருக்க முடியாது.

யோவானிடம் ஏன் ஞானஸ்நானம் பெற்றார்? என்ற கேள்விக்கு இயேசுவே காரணத்தை தருகிறார். " எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது " என்றார். " நிறைவேற்ற" என்கிற வார்த்தைக்கு நிரப்புதல் அல்லது முழுமைப்படுத்துதல் என்று அர்த்தம். இதே வார்த்தையை மோசேயின் நியாயப்பிரமாணத்தை குறிப்பிட்டு பேசுகையில் அதை நிறைவேற்றவே வந்தேன் என்று பயன்படுத்தினார்.

கீழ்ப்படிதல் என்பது பற்றி எழுதுகையில் I யோ 3 : 7 ம் வசனத்தில் யோவான் " நீதியை " என்ற வார்த்தை பயன்படுத்துகிறார் " ..... நீதியைச் செய்கிறவன் நிதியுள்ளவனாயிருக்கிறான் " தேவனிடம் தன் உறவை சீராய் அல்லது நீதியாய் வைக்கிற உள்ளான குணாதியசத்தை அது குறிக்கிறது. இயேசு இந்தத் தன்மையை நிறைவேற்றினாரா?. ஏசாயா தீர்க்கன் தீர்க்கமாய் கூறுகிறார். அவர் நமது ஆண்டவரின் மரணத்தைப் பற்றி எழுதுகையில் " அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார் : என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார் : அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார் " (ஏசா 53 : 11) என்கிறார். தமது மரணத்தை பற்றி. அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகையில் " ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன் : நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தை காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார் : எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் " என்றார். ( 2 தீமோ 4: 6 - 8 ) அத்தேனே பட்டனத்தில் பவுல் பிரசங்கிக்கையில் " பூலோகத்தை ( இயேசு ) நீதியாய் நியாந்தீர்ப்பார் " என்றார். இதன் மூலம் ஒரு கருத்து தெளிவாய் தெரிகிறது. ஒரு நீதியுள்ள மனிதன், நீதியின் கீரிடத்தை ஒரு நீதியற்றவனிடம் பெற்றுகொள்ள முடியாது என்பது தெளிவாகிறது. யோவான், நமது பாவத்தை நிவர்த்தி செய்யும் கிறிஸ்துவைப் பற்றி கூறுகையில் ".....இயேசு கிறிஸ்து நீதிபரராயிருக்கிறார்...." ( I யோ 2 : 12 ) என்றார். ஆகவே, மனிதகுலத்தின் பாவங்களை நிவர்த்தி செய்கின்ற கிருபாதாரபலிக்கு உரிய எல்லா தகுதிகயையும் இயேசு பெற்றிருந்தார். இப்புவியில், நம் பரமனின் வாழ்க்கை நீதியை பிரதிபலிக்கிற ஒன்றாகவே இருந்தது.

மத் 21 : 23 - 27 ல் இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார் என்பதற்கு மற்றொரு காரணமும் காணப்படுகிறது. யூதர்களால் பேணி காக்கப்பட்ட

தேவ ஆலயத்தில் தேவ குமாரனாகிய இயேசு போதிக்கும் போது அவருடைய போதனைக்கு அடிப்படை அதிகாரம் எங்கிருந்து வந்தது என்கிற கேள்வியை பிரதான ஆசாரியனும், மூப்பர்களும் கேட்கிறார்கள். சாத்வீகத்தின் உறைவிடமான இயேசு இவர்களின் கேள்விக்கு பதில் தரும் பொருட்டு ஒரு கேள்வியை சாமார்த்தியமாக கேட்கிறார். " யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷரால் உண்டாயிற்றோ? யாரால் உண்டாயிற்று? என்று கேள்விக்கணைகளை தொடுத்தார் (25 ம் வசனம்) இப்படிக் கேட்டதால் இக்கட்டான சூழ்நிலையின் உச்சியில் அவர்களை உட்கார வைத்தார். அது பரத்தில் இருந்து வந்தது என்று பதில் தெரிந்தாலும். அப்படி சொன்னால் இயேசு வைத்த கண்ணியில் சிக்கி விடுவோம் என்று எண்ணி, பதில் தெரியாதது போல் பசப்பு நாடகம் ஆடினார்கள்.

இயேசு இந்த ஸ்நானத்தைப் பெறவில்லை என்றால் சிக்கலின் உச்சியில் இவர் இருந்திருப்பார். அவரின் முகத்தின் நேர் பார்த்து நயவஞ்சகர்கள் " நறுக் " என்று கேட்டிருப்பார்கள் " பரத்தில் இருந்து வந்தால் நீர் ஏன் இதற்கு பணியவில்லை " இதன் விளைவாக கிறிஸ்துவின் நம்பகத்தன்மை மிகக் குறைந்திருக்கும் என்பதில் மாற்று கருத்திருக்க முடியாது.

" கர்த்தரின் கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்.... " ( சங் 119 : 172 ) என்று பிரதான ஆசாரியனுக்கும் மூப்பர்களுக்கும் தெரிந்திருக்கும். இதனால் தான் இயேசு தம் ஞானஸ்நானத்தை பற்றிக் கூறுகையில் " எல்லா நீதியையும் நிறைவேற்ற " ( மத் 3 : 15 ) என்றார். தேவனுடைய கற்பனை யின்படி செய்தோம் என்றால் அது நம்மை நீதிமானாக்கும். இயேசு கூறினதை மறக்க வேண்டாம் "...பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறேன் " என்றார் (யோவான் 8 : 29) .

நாமும் அப்படிப் பிதாவை பிரியப்படுத்தும் வண்ணம் செயல்படுவோம்!

### வருத்தம் இருக்காது

உங்கள் வாழ்க்கைப் பயணத்தின் முடிவில் இப்பூமியில் வேதாகமத்தைப் படிக்க செலவழித்த நேரத்தைக்குறித்து நீங்கள் ஒரு நிமிடம் கூட வருத்தப்படமாட்டீர்கள். ஏனென்றால், இப்புத்தகம் தான் கடைசிநாளில் நம்மை நியாயந்தீர்க்கும். ( யோவான் 12 : 48).

# மனுஷருடைய கோபம் Vs தேவனுடைய நீதி

By . பாண்டியன்

**கி**றிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளுக்கு ஆண்டவர் இயேசு வின் நாமத்தில் வாழ்த்துக்கள். கோபம் நம்முடைய வாழ்க்கையில் அதிக மாற்றங்களுக்கான அல்லது முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது. இதன் தந்திரம் என்னவெனில், கோபம் அறிவாளிகளுக்கே உரியது, கோபம் இருக்கும் இடத்தில் தான் குணம் இருக்கும் என்று மனுஷரை ஏமாற்றி; கோபம் எல்லாம் சாதாரணமானது! என்றும் பொறுப்புள்ளவர்கள், கண்டிப்பாக வெளிப்படுத்த வேண்டியது என்பது போல நம் சமுதாயம் பழகிவிட்டது. ஆனால், உண்மையில் நம்மை உண்டாக்கிய தேவனுடைய வார்த்தை தான் அதனை நன்றாக ஸ்கேன் செய்து அதன் விபரீதங்களையும், பிரயோஜனமற்ற தன்மைகளையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. **மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாதே.** யாக்1 :20. மனுஷருடைய கோபத்தைப் பற்றிய வேத ஆலோசனைகளைப் பார்ப்போம்.

வேதத்தில் முதல் பெற்றோருக்கு பிறந்த முதல் மனிதன் தன் சகோதரனுடைய காணிக்கையை தேவன் ஏற்றுக்கொண்டதற்காக கோபப்பட்டு ஆபேலைக் கொலை செய்துவிட்டான். அவனுடைய பார்வையில் அது சரி என்று நினைத்திருக்கலாம் அல்லது " கோபம் கண்னை மறைத் துவிட்டது " ! என்பது போல அவன் அந்த அநீதியை செய்துவிட்டான். அதன் பலனாக அவன் இந்த பூமியில் சபிக்கப் பட்டவனாகவும், நிலையற்று அலை கிறவனாகவும் தண்டிக்கப்பட்டான். ஆண்டவர் இயேசு கோபத்தைப் பற்றிப் பேசும் போதுதான் கொலையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். நியாயமில்லாமல் கோபிப்பதும், இழிவான சொற்களைப் பயன்படுத்துவதும் நியாய தீர்ப்புக்கும், நரக தண்டனைக்கும் ஏதுவானது என்று உபதேசிக்கின்றார் ( மத் 5 : 20 - 22 ) சாதாரண வார்த்தைகளில் ஆரம்பித்து கொலையில் முடிந்த அநேக சம்பவங்களை செய்திகளில் நாம் அனுதினமும் காண்கிறோம். பவுலும் எபேசி 4 : 26, 27ல் கோபம் கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள், கோபம் மாலைக்குள் தணிய வேண்டும் என்றும், பிசாசுக்கு இடங்கொடுக்க வேண்டாம் என்று எச்சரிக்கின்றார். இந்த ஆலோசனை யைப் பின்பற்றாத அநேக தம்பதிகள் பிரிந்து வாழ்கிற அவலநிலையையும் காண்கிறோம். (I கொரி 7 : 5) கூடி வாழ்வதே தேவ சித்தமாய் இருக்கிறது.

யாக்கோபின் பிள்ளைகள் சிமியோனும், லேவியும் தங்கள் சகோதரி தீனாளின் நிமித்தம் கொலை செய்த போது அவர்கள் தகப்பனுக்கு அது மன நோவாக இருந்தது ( ஆதி 34 : 30 ). பிள்ளைகள் நீங்கள் உங்கள் நியாயத்தை மட்டும் பார்க்காமல் நம் செயல்களால் " பெற்றோருக்கு எந்த மனநோவும் வரக்கூடாது " என்று வாழும் போதுதான் தேவனுக்கு அது உகந்ததாக இருக்கும். மோசேயின் காலத்தில் ஜனங்களை வழிநடத்தின போது ஜனங்களின் அவிசுவாசமான வார்த்தைகளினால் கோபமடைந்து பேசுவதற்கு பதில் கன்மலையை அடித்துவிட்டார். நமக்கு இது ஒரு சாதாரண காரியம் போல் தோன்றினாலும், தேவன் மோசேயை கானான் தேசம் பிரவேசிக்க முடியாத தண்டனையை வழங்கினார் (எண் 20 : 10 - 12). ஆக, நம் கோபத்திற்கு எவ்வளவு தான் நியாயமான காரியங்கள் இருந்தாலும் அதற்கான விளைவுகளை நாம் சந்தித்தே ஆக வேண்டும் என்ற எச்சரிப்பை இதன் மூலம் பெறுகிறோம். மற்றும் பண ஆசையின் நிமித்தம் தேவ ஜனங்களை சபிக்கச் சென்ற பிலேயாமை தேவன் கழு தையின் வாயிலிருந்து மனுஷபாஷையை வரச்செய்து திருத்தப் பார்த்தார். ஆனால், அவன் கோபம் கண்ணை மறைக்க அதனோடே மறுபடியும் பேசி அவமானப்பட்டதை நாம் அறிவோம். எனவே தான், யாக்கோபு ஆசிரியர் மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாது என்று அறிவுறுத்துகின்றார் (எண் 22 : 27).

ராஜாக்களில் முதல் ராஜாவாகிய சவுலும் தன் கோபத்தினாலும், பொறாமையினாலும் அழிந்து போனான் என்று பார்க்கின்றோம். சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பத்தாயிரம் என்ற ஸ்திரீகளின் பாடலினால் தாவீது மீது எரிச்சலடைந்த சவுல் தன் மகன் யோனத்தான் தாவீதோடே பழகியதற்கு வெகுண்டான். I சாமு 20 : 30, 31. ஆனால் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்ட தாவீதைத்தான் தேவன் அவன் ஸ்தானத்தில் ராஜாவாக்கினார். அதே போன்று ராணுவ தளபதியாகிய நாகமான், தன் குஷ்ட நோய் குணமடைய எலிசாவை சந்திக்க ஆவலோடே சென்ற போது, யோர்தான் நதியில் ஏழுதரம் மூழ்கச் சொல்லிய செய்தியைக் கேள்விப்பட்டு மிகுந்த கோபமடைந்தான் ( 2 ராஜா. 5 : 11, 12 ) அதோடு அவன் போயிருந்தால் அவன் வியாதி நீங்கி இருக்காது அல்லவா? தன் உதவிக்காரன் சொன்ன ஆலோசனை அல்லது வேண்டுதலுக்கு செவி சாய்த்ததினால், எலிசாவின் வார்த்தைக்குக் கீழ்படிந்து குணமடைந் தான்.நாமும்கூட ஆலோசனை நல்லதாயிருக்கும் பட்சத்தில் **அது யார் சொல்கிறார்கள் என்று பார்க்காமல்**, தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படியும் போது மாத்திரமே தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம்.

ஏனெனில் மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாது.

நிதுவே பட்டணத்தாரின் அக்கிரமத்தினிமித்தம் அழிக்கப்படும் செய்தியை நாற்பது நாட்களுக்கு முன்பாக அறிவித்த யோனா அது அழியப் போவதை வேடிக்கைப் பார்க்க நகரத்துக்குப் புறம்பாக உட்கார்ந்து காத்திருந்தான். ஆனால், அந்தப் பட்டணத்து ஜனங்கள் உபவாசித்து மனந்திரும்பி தேவனை வேண்டிக் கொண்டதின் நிமித்தம் தேவன் அவர்களை மன்னித்தார். இது யோனாவுக்கு கடுங்கோபத்தை உண்டாக்கியது (யோனா 4:1) தேவன் மற்றவர் மீது காட்டும் தயவுக்கு நாம் ஏன் கோப்பட வேண்டும். அது மனுஷ பெலவீனம் மனுஷனுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டது. என்பதை அறிந்து நாம் தேவனுக்குப் பிரியமாய் நடந்துக் கொள்வோமாக! புதிய ஏற்பாட்டில் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்ட ஏரோது ராஜாவின் கோபம்இரண்டு வயதுக்குட்பட்ட அநேக குழந்தைகளைக் கொலை செய்தது. ஆனால் தேவனுடைய நீதி கிறிஸ்துவை காப் பாற்றியது. ஆண்டவர் இயேசு தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துரில் வேத வசனங்கள் அவர் வருகையால் நிறைவேறியது என்பதை சுட்டிக் காண்பித்தபோது அந்த ஊரார் இயேசு ஆண்டவர் மீது கோபமடைந்தனர். லூக் 4:28 ஆனால் இயேசு அவர்களை விட்டுக் கடந்து போனார். யோவானும் யாக்கோபும் ஆண்டவருக்கு வழிவிடாத ஊரை அக்கினியால் அழிப்போம். என்று கோபப்பட்டபோது ஆண்டவர் அவர்களை அதட்டி அடக்கினார் (லூக் 9:55) .

அப்போஸ்தலர்களை சபை ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் இயேசு வை பிரசங்கிக்கூடாது என்று தடுத்த போது தேவன் அவர்களுக்கு உதவி யாய் இருந்து அவர்களின் கோபத்திற்கு தப்புவித்தார் அப் 5 : 17 – 20 மனுஷ ருடைய கோபம் தேவனுடைய நீதியை தடை செய்ய முடியாமற் போயிற்று, நீதி மொழிகள் 14:17 ல் முற்கோபி மதிகேட்டை செய்வான் என்று காண்கி றோம். மேலும், நீதி 15 : 1 ல் மெதுவான பிரதியுத்திரம் உக்கிரத்தை மாற்றும், கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும் என்று காண்கிறோம். இதை குடும் பத்தில் பின்பற்றும் போது கண்டிப்பாக தேவ சமாதானம் நம் குடும்பங் களில் விளங்குமல்லவா? யோசித்து பார்ப்போம். எபேசி 4 : 31 ல் சகலவித மான கசப்பும், கோபமும்..... உங்களை விட்டு நீங்கக்கடவது என்று காண்கி றோம். இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாதில், கோபமூட்டுதலில் நடந்தது போல உங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தாதிருங்கள் (எபி 3 : 15 ) ஆனபடியினால், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கு ஏதுவான வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமற் பின் வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக் கடவோம். (எபி 4 : 1) ஆமென்!





# எங்களது இதர வெளியீடுகள்




Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017**


சர்வதேச தரத்தில், தலை சிறந்த பிரசங்கிகளால் எழுதப்பட்ட **சத்தியத்தின் குரல்** என்ற நூல் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.





Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 29 இதழ் - 4 ஏப்ரல் 2016

தனிப்பிரதி ரூ.10/-



19 ஆம் வேனிற்கால முகாம் நடக்கும் ஏலகிரி மலையின் ஓர் எழில்மிகு தோற்றம்